ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 10.5 – கண்ணன் கழலிணை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.5 – கண்ணன் கழலிணை

‡ கண்ணன் கழல் இணை ⋆
நண்ணும் மனம் உடையீர் ⋆
எண்ணும் திருநாமம் ⋆
திண்ணம் நாரணமே ॥ **10.5.1** ॥

நாரணன் எம்மான் ⋆
பார் அணங்காளன் ⋆
வாரணம் தொலைத்த ⋆
காரணன் தானே ॥ **10.5.2** ॥

தானே உலகெல்லாம் ⋆
தானே படைத்திடந்து ⋆
தானே உண்டுமிழ்ந்து ⋆
தானே ஆள்வானே ॥ **10.5.3** ॥

ஆள்வான் ஆழி நீர்க் ⋆
கோள் வாய் அரவணையான் ⋆
தாள் வாய் மலர் இட்டு ⋆
நாள் வாய் நாடீரே ॥ **10.5.4** ॥

நாடீர் நாள்தோறும் ⋆
வாடா மலர் கொண்டு ⋆
பாடீர் அவன் நாமம் ⋆
வீடே பெறலாமே ॥ **10.5.5** ॥

‡ மேயான் வேங்கடம் ⋆
காயா மலர் வண்ணன் ⋆
பேயார் முலை உண்ட ⋆
வாயான் மாதவனே ‖ **10.5.6** ‖

மாதவன் என்றென்று ⋆
ஓத வல்லீர் ஏல் ⋆
தீதொன்றும் அடையா ⋆
ஏதம் சாராவே ‖ **10.5.7** ‖

சாரா ஏதங்கள் ⋆
நீரார் முகில் வண்ணன் ⋆
பேர் ஆர் ஓதுவார் ⋆
ஆரார் அமரரே ‖ **10.5.8** ‖

அமரர்க்கரியானை ⋆
தமர்கட்கெளியானை ⋆
அமரத் தொழுவார்கட்கு ⋆
அமரா வினைகளே ‖ **10.5.9** ‖

வினை வல் இருள் என்னும் ⋆
முனைகள் வெருவிப் போம் ⋆
சுனை நன் மலர் இட்டு ⋆
நினைமின் நெடியானே ‖ **10.5.10** ‖

‡ நெடியான் அருள் சூடும் ⋆
படியான் சடகோபன் ⋆
நொடி ஆயிரத்திப் பத்து ⋆
அடியார்க்கருள் பேறே ‖ **10.5.11** ‖

அடிவரவு — கண்ணன் நாரணன் தானே ஆள்வான் நாடீர் மேயான் மாதவன் சாரா அமரர்க்கு வினை நெடியான் அருள்

**கண்ணன் கழலிணை முற்றிற்று**

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்